# Government of Puducherry
# Directorate of Information Technology

## Press Release

11th February 2013

In a function conducted towards inauguration of NeGP Projects implemented by Directorate of Information Technology through Puducherry e-Governance Society(PeGS), Puducherry, the Hon'ble Chief Minister Shri N.Rangasamy has inaugurated the Official State Portal of Government of Puducherry https://py.gov.in , e-Forms and online issue of Birth & Death Certificates through Common Service Centers(CSCs) on 11.2.2013 in the Training Hall of the Planning & Research Department in the presence of the Hon'ble Minister for Local Administration Shri N.G. Pannirselvam, Chief Secretary Smt.M.Sathiyavathy and Secretary(IT) Shri T.Sreekanth.

The National e-Governance Plan (NeGP) vision is to "Make all Public Services accessible to the common man in his locality, through common service delivery outlets and ensure efficiency, transparency and reliability of such services at affordable costs to realize the basic needs of the common man."

To achieve the above objectives the core infrastructure projects such as State Data Center(SDC) and State Wide Area Network(SWAN)

have already been implemented by the Directorate of Information Technology, Puducherry and are functioning. Under the State Mission Mode Project(MMP) the work flow automation of various departments have been taken up such as Commercial Taxes, Transport, Employment Exchange, Agriculture and Treasury.

**State Portal**

The Puducherry Portal http://www.py.gov.in, the official website of the Union Territory of Puducherry is the single window access for all the Government to Business (G2B) and Government to Citizen(G2C) services offered by the Government of Puducherry through their departments. The portal provides citizen online access to the information of Government Orders, Government Notification, Recruitments, Tenders, Acts & Rules and about the various schemes operated by the departments. The email contacts, addresses of the departments and their website link are provided in the portal. The State Portal and e-Forms have been developed by M/s Infosys Ltd., Hyderabad.

**e-Forms(Electronic Forms)**

The e-Forms are application forms to avail various government services available online. Using the e-form a citizen can apply/send his application through internet to the Government Department for availing the services. The application submitted online will be routed to the concerned department. The department will download the applications for processing and update the status which can be tracked

by the citizen at any point of time. A total of 145 e-forms covering 15 departments have been developed and the forms pertaining to 5 departments viz., Revenue, Labour, School Education, Higher &Technical Education and Social Welfare are made available in the portal and the remaining forms to be made available shortly. The Portal along with e-Forms will provide easy, anywhere and anytime access to Government Services (both Information & Transactional) and Reducing number of visits of citizens to a Government office / department for availing the services

**Online Issue of Birth & Death Certificate through Common Services Center(CSCs)**

CSCs are envisioned as the front-end delivery points for government, private and social sector services to the citizens of India. CSCs have been set up under PPP mode. M/s Tera Software Ltd., Hyderabad is the Service Center Agency(SCA) and they have identified the Village Level Entrepreneurs(VLE) 42 CSCs is operational (Rural – 29, Urban -13) and the citizen can get certificates of Birth & Death across the counter pertaining to any Municipality/Commune Panchayat from the CSCs. The certificate thus issued at CSC is digitally signed and the authenticity of the certificate can be verified at http://puduvaisevai.py.gov.in using security code mentioned in the certificate. The certificate is issued at a nominal charge of Rs.11 per Certificate. The application software for online issue of Birth & Death Certificates have been developed by National Informatics Centre, Puducherry.

The details of period from which the certificate available online is as stated below

**Birth**

| Sl.no. | Local Body | From |
|---|---|---|
| 1 | PONDICHERRY | 1920 |
| 2 | OULGARET | 1920 |
| 3 | ARIANKUPPAM | 1968 |
| 4 | BAHOUR | 1978 |
| 5 | MANADIPET | 1979 |
| 6 | NETTAPAKKAM | 1979 |
| 7 | VILLIANUR | 1905 |
| 8 | KARAIKAL | 2000 |
| 9 | T.R.PATTINAM | 2000 |
| 10 | NERAVY | 2000 |
| 11 | THIRUNALLAR | 2000 |
| 12 | KOTTUCHERRY | 2000 |
| 13 | NEDUNGADU | 2000 |
| 14 | MAHE | 1954 |

**Death**

| Sl.no. | Local Body | From |
|---|---|---|
| 1 | PONDICHERRY | 1951 |
| 2 | OULGARET | 1979 |
| 3 | ARIANKUPPAM | 1978 |
| 4 | BAHOUR | 1979 |
| 5 | MANADIPET | 1998 |
| 6 | NETTAPAKKAM | 1979 |
| 7 | VILLIANUR | 1929 |
| 8 | KARAIKAL | 2000 |
| 9 | T.R.PATTINAM | 2000 |
| 10 | NERAVY | 2000 |
| 11 | THIRUNALLAR | 2000 |

| | | |
|---|---|---|
| 12 | KOTTUCHERRY | 2000 |
| 13 | NEDUNGADU | 2000 |
| 14 | MAHE | 1954 |

The location of CSCs along with addresses are available in the Portal. The other services such as Issue of patta copy, Settlement Copy, Copy of Registered document are on the anvil and to be made available to the citizen online shortly. Under the e-District Project work flow automation of 61 number of services covering 12 departments is being taken up for enabling online delivery of services to be completed by March 2014.

# புதுச்சேரி அரசு
# தகவல் தொழில்நுட்ப இயக்ககம்

## செய்திக் குறிப்பு

**11, பிப்பிரவரி, 2013**

புதுச்சேரி முதலமைச்சர் மாண்புமிகு திரு.ந. ரங்கசாமி அவர்கள் திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறையின் பயிற்சிக் கூடத்தில், 11.02.2013 அன்று தகவல் தொழில்நுட்ப இயக்ககத்தால் (Directorate of Information Technology), புதுச்சேரி மின்–ஆளுகைக் கழகத்தின் (PeGS) வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்ற தேசிய மின்–ஆளுகைத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி அரசின் அதிகாரப்பூர்வ மாநில இணையத்தளம் http://www.py.gov.in, மின்–படிவங்கள், மற்றும் இணையத்தள நேரலையில் பிறப்பு & இறப்புச் சான்றிதழ்களைப் பொதுச்சேவை மையங்கள் மூலம் வழங்குதல் ஆகிய சேவைகளை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.என்.ஜி.பன்னீர்செல்வம், தலைமைச் செயலர் திருமதி எம். சத்தியவதி, நிதித்துறைச் செயலர் திரு.W.V.R. மூர்த்தி மற்றும் தகவல் தொழில்நுட்பச் செயலர் திரு. த. ஸ்ரீகாந்த் ஆகியோர் முன்னிலையில் தொடங்கிவைத்தார்.

பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, “பொதுமக்கள், அவர்கள் வாழ்கின்ற இடத்திலேயே அரசின் அனைத்துச் சேவைகளையும், பொதுச்சேவை மையங்களின் (Common Services Center) மூலம் குறைந்த கட்டணத்தில் பெற வழிவகை செய்வதும், அந்தச் சேவைகளின் திறன், ஒளிவுமறைவற்ற வெளிப்படையான தன்மை, மற்றும்

நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதிசெய்வதுமே தேசிய மின்–ஆளுகைத் திட்டத்தின் (National e-Governance Plan) தொலைநோக்குப் பார்வையாகும்".

மேலே கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக, மிக முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களான மாநிலத் தரவு மையம் (State Data Center), மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு (State Wide Area Network) ஆகிய திட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாநிலச் செயல் இயக்கத் திட்டத்தின் (State Mission Mode Project) கீழ் வணிகவரித் துறை, போக்குவரத்துத் துறை, வேலைவாய்ப்பகம், வேளாண் துறை மற்றும் கருவூலகம் போன்ற பல்வேறு துறைகளின் "பணிச் செயல்முறை" (Work Flow) முழுமையான அளவில் கணினிமயப்படுத்தப் படுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

## மாநில இணையத்தளம் (State Portal)

புதுச்சேரி அரசால் பல்வேறு துறைகளின் வாயிலாக "அரசு – வணிகர்கள் (G2B)" மற்றும் "அரசு – பொதுமக்கள் (G2C)" என்ற முறையில் அளிக்கப்படுகின்ற அனைத்துச் சேவைகளையும் ஒற்றைச் சாளரமுறையில் அணுக வழிசெய்வதே, http://www.py.gov.in என்னும் புதுச்சேரி அரசின் அதிகாரப்பூர்வ மாநில இணையத்தளம் ஆகும். அரசு ஆணைகள், அரசுக் குறிப்பாணைகள், வேலைவாய்ப்புகள், ஒப்பந்தப் புள்ளிகள், சட்டங்கள் & விதிகள் மற்றும் துறைகளால் செயல்படுத்தப்படுகின்ற பல்வேறு செயல்திட்டங்கள் போன்ற தகவல்களை பொதுமக்களுக்கு இணையத்தள நேரலை வாயிலாக இந்த இணையத்தளம் வழங்க வழிவகை செய்கிறது.

இந்த இணையத்தளத்தில் மின்னஞ்சல் தொடர்புகள், துறைகளின் முகவரிகள் மற்றும் துறைகளின் இணையத்தள இணைப்புகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன. மாநில இணையத்தளம் மற்றும் மின்–படிவங்கள் யாவும் ஐதராபாத்தைச் சேர்ந்த இன்போசிஸ் லிட் (M/s. Infosys Ltd., Hyderabad) என்னும் நிறுவனத்தால் தயாரித்து அளிக்கப்பட்டுள்ளன.

## மின்–படிவங்கள் (மின்னணுப் படிவங்கள்)
## e-Forms (Electronic Forms)

மின்னணுப் படிவங்கள் என்பது அரசின் இணையத்தள நேரலையில் கிடைக்கின்ற அரசின் சேவைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் ஆகும். இந்த மின்–படிவ முறையைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை இணையத்தளத்தின் வாயிலாக அரசுத் துறைகளுக்கு அனுப்பிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இணையத்தள நேரலையின் மூலம் அளிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் அனைத்தும் தொடர்புடைய துறைகளின் இணையத்தளத்துக்குச் சென்றுவிடும். துறைகள் இவ்விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து, செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளும். மேலும், விண்ணப்பங்களின் மேம்பாட்டு நிலையைப் பதிவேற்றம் செய்யும். இதனைப் பொதுமக்கள் எந்த நேரத்திலும் இணையத்தளத்தில் அறிந்துகொள்ள முடியும். இதுவரை 15 துறைகளின் 145 மின்–படிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில், வருவாய்த் துறை, தொழிலாளர் துறை, பள்ளிக்கல்வி, உயர்கல்வி மற்றும் சமூக நலத்துறை ஆகிய ஐந்து துறைகளின் படிவங்கள் மாநில இணையத்தளத்தில் தற்போது கிடைக்கும். எஞ்சிய துறைகளின் படிவங்கள் விரைவில் கிடைக்குமாறு செய்யப்படும். மின்–படிவங்களுடன் கூடிய இந்த மாநில

இணையத்தளமானது, எளிமையான முறையில், எவ்விடத்திலிருந்தும், எந்த நேரத்திலும் அரசின் சேவைகளைப் (தகவல் அறிதல் மற்றும் பரிவர்த்தனை செய்தல்) பெற்றுக்கொள்ள வழிசெய்கிறது. மேலும், இது பொதுமக்கள் தேவையின்றி அரசு அலுவலகங்கள் மற்றும் துறைகளுக்கு நேரடியாக வருகைபுரிதலைக் குறைக்கிறது.

## பொதுச்சேவை மையங்கள் (Common Service Centers) வாயிலாகப் பிறப்பு & இறப்புச் சான்றிதழ் இணையத்தளத்தின் மூலம் வழங்கல்

அரசு, தனியார் மற்றும் சமூகப் பிரிவுகளின் சேவைகளைப் பொதுமக்களுக்கு அளிக்கும் முன்னிலை மையங்களாகப் (front end delivery) பொதுச்சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுத்துறை–தனியார்–பங்களிப்புத் திட்டத்தின் (Public Private Partnership) கீழ் பொதுச்சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், ஐதராபாத்தைச் சேர்ந்த டெரா சாப்ட்வேர் லிட் (M/s. Tera Software Ltd., Hyderabad) என்னும் நிறுவனம் சேவை மைய முகமையாகச் (Service Center Agency) செயல்படுகிறது. இம்முகமை, கிராம அளவிலான தொழில்முனைவோர்களைக் (Village Level Entrpreneurs) கண்டறிந்துள்ளது. இதில், 42 (ஊர்ப்புறம்–29, நகர்ப்புறம்–13) பொதுச்சேவை மையங்கள் செயல்பாட்டில் உள்ளன. மேலும், அனைத்து நகராட்சிகள் மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள பிறப்பு & இறப்புச் சான்றிதழ்களைப் பொதுமக்கள் இம்மையங்களின் வழங்கறைகளில் (Counter) பெற்றுக்கொள்ளலாம். இம்மையங்களில்

வழங்கப்படும் சான்றிதழ்கள் எண்மயப்படுத்தப்பட்டவை (Digitally signed). இவற்றின் நம்பகத்தன்மையை சான்றிதழ்களில் வழங்கப்பட்டுள்ள காப்பு எண்ணைப் (Security Code) பயன்படுத்தி http://puduvaisevai.py.gov.in என்னும் இணையத்தளத்தில் சரிபார்த்துக்கொள்ளலாம். ஒரு சான்றிதழ் ரூ.11க்கு வழங்கப்படும். இணையத்தளத்தின் மூலம் வழங்கப்படவுள்ள இச்சான்றிதழ்களின் மென்பொருள் புதுச்சேரி தேசியத் தகவல் மையத்தினால் (National Informatics Centre) தயாரிக்கப்பட்டுள்ளது. இணையத்தள நேரலை வசதியில் வழங்கப்படவுள்ள பிறப்பு & இறப்புச் சான்றிதழ்களின் ஆண்டு விபரம் பின்வருமாறு:

பிறப்புச் சான்றிதழ்

| வரிசை எண் | உள்ளாட்சி மன்றம் | இந்த ஆண்டிலிருந்து |
|---|---|---|
| 1 | புதுச்சேரி | 1920 |
| 2 | உழவர்கரை | 1920 |
| 3 | அரியாங்குப்பம் | 1968 |
| 4 | பாகூர் | 1978 |
| 5 | மண்ணாடிப்பட்டு | 1979 |
| 6 | நெட்டப்பாக்கம் | 1979 |
| 7 | வில்லியனூர் | 1905 |
| 8 | காரைக்கால் | 2000 |
| 9 | திருமலைராயன் பட்டினம் | 2000 |
| 10 | நிரவி | 2000 |
| 11 | திருநள்ளார் | 2000 |
| 12 | கோட்டுச்சேரி | 2000 |
| 13 | நெடுங்காடு | 2000 |
| 14 | மாகி | 1954 |

இறப்புச் சான்றிதழ்

| வரிசை எண் | உள்ளாட்சி மன்றம் | இந்த ஆண்டிலிருந்து |
|---|---|---|
| 1 | புதுச்சேரி | 1951 |
| 2 | உழவர்கரை | 1979 |
| 3 | அரியாங்குப்பம் | 1968 |
| 4 | பாகூர் | 1978 |
| 5 | மண்ணாடிப்பட்டு | 1998 |
| 6 | நெட்டப்பாக்கம் | 1979 |
| 7 | வில்லியனூர் | 1929 |
| 8 | காரைக்கால் | 2000 |
| 9 | திருமலைராயன் பட்டினம் | 2000 |
| 10 | நிரவி | 2000 |
| 11 | திருநள்ளார் | 2000 |
| 12 | கோட்டுச்சேரி | 2000 |
| 13 | நெடுங்காடு | 2000 |
| 14 | மாகி | 1954 |

பொதுச்சேவை மையங்களின் அமைவிடம் மற்றும் முகவரி ஆகியவை மாநில இணையத்தளத்தில் கிடைக்கும். பட்டா நகல் வழங்கல், நிலவரித்திட்டப் பதிவேட்டுச் சுருக்க நகல், பதிவேட்டு ஆவணம் போன்ற பிற சேவைகளும் இணையத்தள நேரலையில் விரைவில் கிடைக்குமாறு வழிவகை செய்யப்பட்டு வருகிறது. மின்–மாவட்டத் திட்டத்தின் (e-District Project) கீழ் 12 துறைகளின் 61 சேவைகளின் "பணிச் செயல்முறை" (Work Flow) முழுமையான அளவில் கணினிமயப்படுத்தப்படுத்தப்பட்டு, இணையத்தள நேரலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் மார்ச்சு 2014க்குள் முடிவடையும்.